(6 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 7426** **Sub. Code : HTLM 23**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2016.

Second Semester

தமிழ்

பக்தி இலக்கியமும் சிற்றிலக்கியமும்

(For those who joined in July 2012 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான்' யார்

(அ) சிவபெருமான் (ஆ) திருமால்

(இ) முருகன் (ஈ) விநாயகர்

2. நீத்தல் விண்ணப்பம் தோன்றிய தலம் எது?

(அ) திருப்புல்லாணி (ஆ) உத்திரகோசமங்கை

(இ) உத்திரமேரூர் (ஈ) இராமநாதபுரம்

3. திருமணத்தின்போது இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டவர் யார்?

(அ) திருஞானசம்பந்தர்

(ஆ) குகைஞானசம்பந்தர்

(இ) மெய்கண்டார்

(ஈ) குகைநமச்சிவாயர்

4. தில்லைக் கோயிலுக்குப் பொன்வேய்ந்த சோழ மன்னன் யார்?

(அ) விக்கிரமன் (ஆ) இராசேந்திரன்

(இ) குலோத்துங்கன் (ஈ) முதற்பராந்தகன்

5. ஆண்டாள் தான் கண்ட கனவினை யாருக்குக் கூறுகிறாள்?

(அ) தந்தை (ஆ) அன்னை

(இ) பெரியாழ்வார் (ஈ) தோழி

6. அரங்கனைத் தரிசனம் காண வந்தவர்களுள் இவரும் ஒருவர்?

(அ) முருகன் (ஆ) விநாயகன்

(இ) ஐயப்பன் (ஈ) அருகன்.



Nesamony Memorial Christian College, Marthandam

7. எதை அநுசந்தானம் பண்ணுபவர் பெரிய நன்மையை அடைவர்?

(அ) பால்ய பிரார்த்தனை

(ஆ) மரண சிந்தனை

(இ) வேதியர் ஒழுக்கம்

(ஈ) கடைக்கணி

8. விக்கிரமசோழன் உலா எவ்வகைப் பாவகையில் பாடப்பட்டுள்ளது?

(அ) கலிப்பா (ஆ) கலிவெண்பா

(இ) வெண்கலிப்பா (ஈ) கலித்துறை

9. 'மருவு பெண்ணாசையை மறக்க' ..... வள்ளலார் யாரிடம் வேண்டுகிறார்?

(அ) பிள்ளையார் (ஆ) கந்தவேள்

(இ) மகாவிஷ்ணு (ஈ) சிவபெருமான்

10. நாலாயிரதிவ்ய பிரபந்தத்தில் இறுதியாக (108 பாடல்கள்) இணைக்கப்பட்ட நூல் எது?

(அ) பதிற்றுப்பந்தாதி

(ஆ) இராமநுசர் நூற்றந்தாதி

(இ) அஷ்டப்பிரபந்தம்

(ஈ) அபிராமி அந்தாதி



பகுதி ஆ — $(5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு 250 சொற்களுக்கு மிகாமல் விடையளி.

11. (அ) வலம்புரத்து அடிகள் எவ்வாறு வீற்றிருப்பதாக அப்பர் இயம்புகின்றார்?

(அல்லது)

(ஆ) நீத்தல் விண்ணப்பத்தில் காணலாகும் உவமைப் பகுதிகளை விளக்குக.

12. (அ) சுடுகாட்டில் காணலாகும் காட்சியை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) தில்லை மூவாயிரம்பேரைப் பற்றிக் கண்டராதித்தர் எவ்வாறு இயம்புகின்றார்?

13. (அ) கண்ணனோடு தன்னை இணைத்துக் காப்பு கட்டியதாக ஆண்டாள் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) அதிகாலைக் காட்சிகளைத் தொண்டரடிப் பொடியாழ்வார் எவ்வாறு வர்ணிக்கின்றார்?

14. (அ) ஒன்று முதல் பத்து முடிய உள்ள பண்பின் தன்மையை 'எண்பொருள் பதிகம்' வாயிலாக விவரி.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கியங்களில் உலா அமைப்பை விவரி.



Nesamony Memorial Christian College, Marthandam

15. (அ) 'மூடர்' என வள்ளலார் யாரைக் குறிப்பிடுகிறார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) பக்தி இலக்கியக் காலத்தில் சைவ வைணவப் பூசல்கள் பற்றி விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) இயற்கையை வர்ணித்துக் கூறுவதில் நாவுக்கரசர் வல்லவர் என்பதைத் தேவாரப்பாடல்வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) இறைவனை அடையாது துன்புற்று வாழும் மாணிக்கவாசகரின் நிலை யாது?

17. (அ) எந்தெந்த இசைக்கருவிகள் முழங்க, ஆலங்காட்டு இறைவன் ஆடுவதாகக் காரைக்கால் அம்மையார் உரைக்கிறார்?

(அல்லது)

(ஆ) பதஞ்சலி முனிவர் களிப்புற இறைவன் எவ்வாறு நடனமாடுகின்றான்?



18. (அ) அரங்கனைத் தரிசிக்க யார்யார் வந்துள்ளனர் என்பதைத் திருப்பள்ளியெழுச்சி வழி இயம்புக.

(அல்லது)

(ஆ) 'சரணாகதித் தத்துவம்' – குறித்து நும்பாடப்பகுதியைக் கொண்டு விளக்குக.

19. (அ) கிருஷ்ணப்பிள்ளைப் பாடல்களில் காணலாகும் அணிகளை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) 'உலா இலக்கியம் பாடுவதில் வல்லவர் ஒட்டக்கூத்தர்' என்பதை அவர்தம் மூவருலாவழி விளக்குக.

20. (அ) சிற்றிலக்கியங்களில் ஏதேனும் ஒன்றில் அகப்பொருள் இலக்கணம் பொருந்திவருவதை ஆராய்க.

(அல்லது)

(ஆ) வள்ளலார் இறைவனிடம் வேண்டுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

---



Nesamony Memorial Christian College, Marthandam